News and Articles in Tamil and English
Please send them to:

THE EDITOR,
The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka
Under No.Q / J / 104 / News / 89
*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*
Vol: 156 Jaffna, Friday 17. February 1995. No. 07
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island : Rs 100/-
*For Advertisements*
*Apply to:*
THE MANAGER
The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

News from Adelaide

## Five New Tamil Doctors Produced in Adelaide

In the final MBBS examination conducted by the University of Adelaide in December 1994 four Tamil students came out with flying colours- Joseph Brinda Selvanayagam performed best being included in the Dean's List as well as the Honours List. Chrisanthi Sanders won the Lynda Tapp prize in Physiology awarded for first rank in Physiology in the Third Year. Others who completed successfully are Deepa Jeyaseelan and Indrajit Karalasingam.

## Exam Success

S Sabesan won an Australian government scholarship at the Year 12 ( Tamil medium ) examination from Hartley College Point Pedro and joined the Flinders University in 1989 as a medical student. He completed all his academic examinations by December 1994, obtaining an over- all average at Distinction level, with three Distinctions in the final year and a number of others in the previous years. He is currently doing his Elective at the Civil Hospital, Jaffna and will return later this year to complete his sixth year requirements at the Flinders Medical Centre.

## Araly Church

The foundation stone for the open air stage erected in the Araly Church premises to be constructed by Mr. and Mrs. Rajkumar in memory of Mr. and Mrs. Rathi Chellappa parents of Mrs Reenawathy Rajkumar of Switzerland, was laid by Rt. Rev. Dr. S. Jebanesan on 12th February 1995 after the morning worship service. The construction is expected to be completed and opened before Easter Sunday

## 1994 ANNUAL GENERAL MEETING AND CHRISTMAS CELEBRATION

The annual general meeting of the Ceylon Tamil Association of South Australia was held at the Julia Farr Centre, Fullarton on Saturday 17 Dec. 94.

In the absence of the outgoing secretary, Mr. S. Dharmasenan acted as recording secretary and the President Dr. R. Ravindran read the minutes of the previous annual general meeting and presented his report on the activities of the Association for the year 1994. He mentioned that a sum of 2,498.35 dollars was raised at the New Year Dinner in April in response to the Jaffna University Vice - Chancellor Prof. Thurairajah's appeal for financial assistance to buy books and equipment for the Faculty of Agriculture, Kilinochi. Unfortunately the Vice - Chancellor died before our money was sent. When the Prof. Thurairajah Memorial Fund was set up, a sum of dollars 1,000 from the CTA general account was added to the dollars 2,500 collected and a total of dollars 3,500 sent to the Fund.

The President also spoke about the Family get-together Dinner on 10 September and the visit of Sevak Sam Alfred of Christa Sava Ashram, Chunnakam and the CTA meeting with him on 30 October.

Reporting on the Tamil Language School the President expressed his and the Association's deep gratitude to Mrs. J. Ganeshalingam who after serving the school as principal for eight years faithfully and devotedly resigned last month. He raised concern about the drop in attendance of children and invited parents to say what they want done to encourage children to pay more attention to the study of Tamil language. After some discussion the meeting directed the new Committee to consult with the parents further and take the necessary steps to ensure that a Tamil Language School continues to function in east or north-east Adelaide in addition to the one held in the Oaklands Park Hindu Temple.

In the Christmas Concert which followed the stringhopper dinner, the Tamil vocal and instrumental items presented by the children Usha and Anil Nitchingham, Evelyn and Jonathan Sinnadurai, Romona and Ragulan Balendra and Christina Selvanayagam were much appreciated. Youth member Christopher Selvanayagam spoke on the significance of the Christmas Festival; Shalini Bastiampilla and Evelyn Sinnadurai ecited in dialogue form an amusing poem on "What is Christmas?" and the youth quartet composed of Dilani Ponniah, Minara Navaratnam, Shalini Bastiampillai and Evelyn Sinnadurai sang the carol "What Child Is This?" The compere of the show was Sam Jeyaseelan

## Representatives of the National Council of YMCA's Visit Jaffna

Mr. Sriyantha Senaratna, President of the National Council of Y. M. C. A. Mr. Asoka Wijeyasekera, its General Secretary, Mr. Anura Shanth Nonis, Secretary for Children Development, Youth and Young Adults Programme, and Mr.S. Vijeyakulasingam, Secretary for Leadership Development and Extension, were in Jaffna from 4th to 6th Feb. 1995. During their short stay they visited the Y. M. C. A.'s of Jaffna College, Pandetterippu Navaly, Manipay and Uduvil. At Jaffna they met the members of Jaffna and Kayts Y M C A's They were warmly greeted by the respective Y M C A's which they visited and shared their views and experiences on the projects undertaken by the respective Y. M. C A's They were very impressed by the activities of the Y. M C. A's here. They appreciated that at every executive meeting of the National Council held in Colombo at least one member from the North was present inspite of the most difficult and dangerous travelling they had to undertake Their programming and funding depended only on the reports sent from here, but on seeing the work and the projects, especially the pre-school programmes with children they now realise amidst what constraints the programmes were carried on here.

On the 4th night they were hosted a dinner at the Jaffna Y. M. C. A. by the members of the Regional Council. A well representative group inclusive of member Y. M. C A's and representatives of the Jaffna branch of the 'Save the Children's Organization' were present. At a welcome meeting which was held, presided by Mr. S. Ratnavel the newly elected president, all the new committee members of the Regional Council too were present. The meeting commenced with prayer said by Sevak Sam Alfred. Dr. T. W. Jeyakularaja, President of Jaffna YMCA on behalf of the Regional Council welcomed the guests saying that "we all are very happy and honoured by your visit." This has given them on opportunity of seeing the work done here. Mr C. Jeyaratnam President of Navaly YMCA expressed his deep gratitude to the delegation to have braved the trip through 'Kilali' instead of the air and ship journeys chosen by other delegations. He briefed the delegation on the activities and the programmes carried on by the YMCA's here, among the refugees, the displaced families, widows, the unemployed and

(Continued on page 4)

# வாழும் எழுத்துக்கள்

"நான் யார்"? ஹிட்லருக்கு விரோதமாகப் புரட்சி செய்து சிறையிலே இடப்பட்ட டீற்றிக் பொன்ஹோபர் கைதியாகவிருந்த பொழுது எழுதியது. டீற்றிக் பொன்ஹோபர் 1906 ம் ஆண்டு பிறந்தவர். 1945ம் ஆண்டு ஹிட்லரினாற் சிரச்சேதம் செய்யப்பட்டார்.



டீற்றிக் பொன் ஹோவர்

## WHO AM I

Who am I? they often tell me
I stepped from my cell's confinement
Calmly, cheerfully, firmly
Like a squire from a country house
Who am I ? they often tell me
I used to speak to my wardens
Freely and friendly and clearly,
As though were mine to command
Who am I ? They also tell me
I bore the days of misfortune
Equally, smilingly, proudly
Like one accustomed to win
Am I then really all that which other men tell of ?
Or am I only what I myself know of myself,
Restless, and longing and sick, like a bird in a cage
Struggling for breath as though hands were compressing my throat
Yearning for colours, for flowers, for the voice of birds,
Thirsting for words of kindness, for neighbourliness,
Tossing in expection of great events,
Powerlessly trembling for friends at an infinite distance,
Weary and empty at praying, at thinking, at making
Faint and ready to say farewell to it all ?
Who am I ? This or the other ?
Am I one person to-day and to-morrow another ?
Am I both at once ; A hypocrite before others.
and before myself a contemptibly woe begone weakling ?
Or is something within me still like a beaten army
Fleeing in disorder from victory already achieved ?
Who am I ? They mock me, these lonely questions of mine.
Whoever I am, Thou knowest God, I am thine.

# நான் யார்?

## தமிழில் திரு. ஏ. எம். கே. குமாரசுவாமி

நானாரோ என்று பல முறை நானோர்ந்தேன் நவிலரிய
திகில் சூழ்ந்த சிறைக்கூடும்
கோனாகக் குதூகலித்துக் குபேரன் போலக்,
கோதுணராக் கொற்றவனாய்ப் போனேனென்றார்
தேனாக மொழிந்தே என் காவலர்க்குத்
திடமுடைய தளகர்த்தனாகத் தோன்றி
சேனாதிபதி நடந்த செம்மையாகச் சென்றே
னென்றோதினரே சிறையின் நண்பர்.

(2)

மற்றோர் கண் தோற்றின மாவீரன் நானோ
மறுபக்கம் நானுயர்ந்த பேதை தானோ?
சிற்றுயிராம் சிறுபறவைக் கூட்டுள் கண்ணே
சிறைப்பட்டு திகிலடைந்த வண்ணமாக
உற்றுணர மாட்டாதின் றோலமிட்ட
உருவாகி உளம் கசிந்தே யுதாரமற்று
வற்றுண்ட வயல் போலும் வாடிச்சோர்ந்து
வலியற்றதோ என் நிலைமை விளங்கவில்லை

(3)

எத்துறையேன் அடியேனாயிருந்தாலும்
எந்தா யென்னுடையாயின் தோன்றே கண்டேன்.
சித்த முவந்தில் வறிவைச் சிறக்கப் பெற்றால்
சிறியேன் யாரென்பதனைச் சிதைவு செய்யா
துத்தமனே யுன்னுடையே னென்றுணர்ந்தேன்,
உலகத்தினிவிதை மேவரென்றில்லை
நித்தநிதி நீயென்ற நிமித்தம் கண்டேன்,
நின்மலனே நினதடி என்றுமே சரணம் தானே.

# செய்திச் சிதறல்

## அடிக்கல் நாட்டுதல்

அராலித் திருச்சபையில் இம் மாதம் 12. 02 94 அன்று ஞாயிறு காலை ஆராதனையைத் தொடர்ந்து திறந்த கலை அரங்குக்கான அடிக்கல்லை பேராயர் அறிவர் எஸ் ஜெபநேசன் நாட்டினர். இக்கலை அரங்கை சுவிஸ்ஸில் வாழும் திரு. திருமதி இராஜக்குமார் அவர்களால் திரு திருமதி ரத்தி செல்லப்பாவின் நினைவாக கட்டுவதற்கு முழு செலவையும் தருகின்றார்கள். மிக விரைவில் இவ் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு உயிர்தெழுதல் காலங்களில் திறப்பு விழாவை நடாத்த தீர்மானித்துள்ளனர்

## நன்றி செலுத்தும் ஆராதனை.

04-02-94 அன்று காலமாகிய திருமதி. அலிஸ் முத்துமணி அரியட்ணம் அவர்களை நினைவுகூர்ந்து ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் ஆராதனை 707 வைத்திய சாலை வீதியில் அமைந்த அவர் வாழ்ந்த வீட்டில் 04-02-95 மாலை 4 . 00 மணிக்கு நடைபெற்றது. ஆராதனையை அருட் திரு. எஸ். எஸ். கருணைராஜ் நடாத்தினார். பாராட்டுரைகளை திரு. கிருபைராஜ் செல்லையாவும், நகர்ப்பணி திருச்சபை ஊழியனும் நடாத்தினர். அருள் உரையை அருள்திரு டி . ஆர் . அம்பலவாணர் நடாத்தினார் இறுதி ஜெபமும் ஆசீர்வாதத்தையும் அருட்திரு. எஸ் எஸ். கருணைராஜ் அவர்களே நடாத்தினார்.

## கலைப்பீட மாணவர்கள் பகிஷ்கரிப்பு

யாழ் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர்கள் விரிவுரைகளை பெப். 9ம் திகதி முதல் பகிஷ்கரித்துவருகின்றனர். மாட்டு வண்டி ஒன்றில் பல்கலைக்கழகத்துக்கு வந்த புதிய மாணவர்களின் வண்டி எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் சிரேஷ்ட மாணவர் வரை மீள அனுமதிக்குமாறு கோரி இப்போராட்டம் நடைபெற்றது.

## கடல் நர்த்தகியில் யாழ் கடிதங்கள்

பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்குமிடையே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் சேவையில் ஈடுபடவிருக்கும் பயணிகள் கப்பலான கடல் நர்த்தகியில் (Sea Dancer) யாழ் கடிதங்களை எடுத்துச் சென்று திருமலையில் ஒப்படைப்பதற்குச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் சம்மதம் தெரிவித்துள்ளதாக யாழ் பிரதம அஞ்சல் அதிபர் திரு சி கோட்ஸ்வரன் தெரிவித்துள்ளார். இத்தகைய சேவையினைக் கடந்த ஆண்டிலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் வழங்கியிருந்தனர்.

## பின்லாந்து குழுவினர்

பின்லாந்து நாட்டின் தொலைக்காட்சி நிறுவனத்தின் படப்பிடிப்பாளர் குழுவினர் யாழ்ப்பாணம் வந்து, யாழ் குடாநாட்டின் தற்போதைய நிலைமையைப் படமாக்கிக் கொண்டு, விடுதலைப் புலிகளின் பிரதி நிதிகளையும் பேட்டி கண்டு சென்றுள்ளனர்.

## அமெரிக்க தமிழ் பேராசிரியர் யாழ் வருகை

அமெரிக்காவில் கடமையாற்றும் மல்லாகத்தை பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் டேவிட் நேசராசா இரட்ணவேல் என்ற மனநோய் வைத்திய நிபுணர் 40 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவில் குடியேறினவர். இவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து மருத்துவக் கல்லூரியில் போரின் உளவியல் அம்சங்கள் என்னும் பொருளில், யாழ் போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிப் பாடசாலையில் உரையாற்றியுள்ளார்.

நீதி ஜனத்தை உயர்த்தும் பாவமோ
எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி.

# உதயதாரகை

ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை
Estd. 1841

மலர்: 156 17-02-1995 இதழ்: 07

## பேராயர் சபாபதி குலேந்திரன்

தென் இந்திய சபை யாழ் ஆதீனத்தின் முதற் பேராயர் சபாபதி குலேந்திரன் அவர்கள் அமரத்துவமெய்தி மூன்றாண்டுகள் நிறைவுறும் இந்நாட்களில், அன்னாரின் அரும் பெரும் பணிகளை நன்றியுடன் நினைவு கூறுகிறோம்.

பேராயர் அவர்கள் யாழ். ஆதீனத்துக்கும் தமிழீழ மக்களுக்கும் ஆற்றிய திருத்தொண்டுகளை நாம் என்றும் மறக்கமுடியாது. அவர் ஆர்வத்துடன் கற்பன கற்றுக் காப்பன காத்துக் கடிவன கடிந்து - நல்லிணக்கமும், நன்நினைப்பும், நல்லுரையும் நற்செயலும் உடையாராய் நற்பணியாற்றி வந்தார். இதனால் இவரை 'நன்றுடையார்' எனச் சான்றோர் பாராட்டி வந்தனர் இறைவன் தமக்களித்த திறன்களை இறைவனுக்கே அர்ப்பணித்து அயாரது செயலாற்றி நமக்கு நல்வழிகாட்டும் நட்சத்திரமாய்த் திகழ்ந்தார் நம் பேராயர்.

இறையியல் துறையில் ஆழ்ந்த புலமை பெற்று பல்வேறு மொழிகளைப் பழுதறக் கற்றுப் பன்மொழி வல்லுனராய் விளங்கி தம் தாய்மொழியாம் பைந்தமிழில் தணியாத ஆர்வம் கொண்டவராய் திருக்குறள், திருவாசகம் தேவாரங்கள் ஆகியவற்றை திருமறையுடன் ஒப்பிட்டுக் கற்றுப், பல அரும்பெரும் கருத்துக்களை வெளிக் கொணர்ந்தார். தாயுமானவர் பாடல்களில் இவருக்குத் தனி விருப்புண்டு.

பேராயர் அவர்கள் தாம் பெற்ற இறையியல் அறிவைப் பயன்படுத்தி, இந்து சமய நூல்களையும் பிற சமயங்களையும் நுணிகி ஆராய்ந்து அவற்றின் நுட்பங்களையெல்லாம் உணர்ந்து ''கிறிஸ்தவத்திலும் இந்துசமயத்திலும் அருள்'' என்ற தலைப்புடன் ஒரு சிறந்த ஆய்வு நூலை ஆக்கினார். இன்னுஞ் சில, சமய - சமுதாயஞ் சார்ந்த நூல்களையும், பல கட்டுரைகளையும் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதி உலகில் நன் மதிப்புப் பெற்றார்.

குருத்துவ ஊழியத்தில் ஈடுபட்டோர்' திருமறையைக் கசடறக் கற்று. தமிழ் இலக்கியத்தை குறிப்பாக நீதி நூல்களை நன்கு கற்று-சபைகளில் தம் வாழ்வினாலும் அருளுரையாற்றுவதனாலும் ஒரு சிறந்த ஊழியர்களாகத் திகழவேண்டும் என அடிக்கடி அறிவுறுத்தி வந்தார்.-குருத்துவ ஊழியர்க்குக் குருத்துவத்தந்தையாக அவர்களை இறைபணியில் அன்புடன் வழி நடத்தி வந்தார்.

யாழ். ஆதீனத்திலும்' தமிழீழ மக்கள் நெஞ்சங்களிலும் அழிக்க முடியாத முத்திரை யொன்றைப் பதித்து விட்டு இறைவனின் திருவடிகளில் இளைப்பாறும் நம் அன்புப் பேராயரை நாம் என்றும் நன்றியுடன் நினைவு கூரல் வேண்டும்.' அறிவுலகில் ஆழ்ந்த, பரந்த 'விரிந்த பெருமனப் பான்மையுடைய உயர் விருட்சமாக விளங்கிய பேராயர் குலேந்திரன்-பெரியார்களின் வரிசையில் தனியிடம் பெற்றிருப்பதையறிந்து நாம் கிறிஸ்துவுக்குள் பெருமையடைகிறோம் எல்லாம் வல்ல இறைவனுக்கே கனமும் மகிமையும் உரித்தாகுக

### அத்தியட்சாதீன கூட்டத்தொடர்

இம்மாதம் 22, 23, 24ம் திகதிகளில் யாழ் கல்லூரி ஒட்லிமண்டபத்தில் நடைபெறும் எனத் தெரிகிறது.

இம்முறை அவுஸ்திரேலியஅமெரிக்கப் பிரதிநிதிகளும் இக்கூட்டங்களிலே கலந்து கொள்வார்களெனத் தெரியவருகிறது. அத்தியட்சாதீன சம்பந்தமான மூன்று நூல்களும் இக்கூட்டத்தின் போது வெளியிடப்படும்.

### மத்திய கர்னாடகம் புதிய ஆயர் தெரிவு

மத்திய கர்னாடகத்தின் ஆயர் பதவி அதிவண ஜத்தனா அவர்களுடைய இளைப்பாறுதலின் பின்னர் நிரப்பப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். புதிய ஆயருக்கான தேர்தல் இந்த வருடம் ஜனவரி மாதம் நடைபெற்றது. செனட் மகா சபை ஆதீனத்தினால் அனுப்பப்பட்ட பட்டியலிருந்து ஒருவரை பேராயராக தெரிவு செய்யும் எனத் தெரிகின்றது

### உயிர்த்தெழுந்த திருநாள் பஜனை

இவ்வருடம் ஏப்பிரல் மாதம் 16ம் திகதி யாழ் வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்திலே நடைபெறும் இதற்கான ஒழுங்குகளை தெ இ. தி' யாழ் ஆதீனம் சமயக் கல்விக் குழு செய்து வருகிறது

### மணற்காட்டுப் பிரதேசத்தில் பழச்செய்கை

மணல் வெளியாகக் காணப்படும் மணற் காட்டுப்பிரதேசத்தில் பயன் தரும் பழமரக்கன்றுகளை சூழல் பாதுகாப்பு நிறுவனம் பரீட்சார்த்தமாக நட்டுப் பராமரித்துவருகிறது. 1994ம் ஆண்டு இறுதிப்பகுதியில் 40 ஏக்கர் நிலப் பரப்பில் தென்னை மரங்களும், 200 ஏக்கர் நிலப்பரப்பில சவுக் மரங்களும் நடப்பட்டு பராமரிக்கப்பட்டுவருகிறது. இப்பகுதியில் மா, பலா, தோடை, மாதுளை. தேசி, 'இட்டுபப்பாசி' ஆகிய பழ மரங்களையும் இப்பகுதியில் பரீட்சார்த்தமாக நடுகை செய்துள்ளனர்

## அத்தியட்சர் கடிதம்
### பெப்பிரவரி — 1994

கிறிஸ்துவுக்குள் அன்பான என் மக்களே,

அத்தியட்சாதீன சங்கத்தின் 48வது வருடாந்தக் கூட்டம் பெப்பிரவரி மாதம் 23ம் திகதி தொடக்கம் 25ம் திகதிவரை யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

இந்தக் கூட்டம் கடந்த கால அனுபவங்களை எண்ணிப்பார்க்கவும் வருங்காலத்துக்குரிய திட்டங்களைச் சிந்தித்துச் சீர் தூக்கவும் வழி சமைக்கும். இக்கூட்டம் பக்திசிரத்தையுடனும் இலட்சிய வேட்கையுடனும் நடைபெற ஊக்கமாக ஜெபியுங்கள். உலகத்தாரின் கனவிலும் பெரிதே உண்மையான ஜெபத்தின் பயன்கள்'' என்றார் ஆங்கில மகாகவி ரெனிசன்

48வது வருடாந்தக்கூட்டத்தின் மகுட வாக்கியமாக பின்வரும் வசனம் அமையும்

''ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள்
தேவனுடைய நகரத்தையும் உன்னதமானவர் வாசம்பண்ணும்
பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும்.'' சங் 46 : 4

அத்தியட்சாதீன சங்கபிரதிநிதிகளும் ஊழியர்களும் இந்த வசனத்தைக் குறித்து ஆழமாக சிந்தித்து வரும்படி கேட்கப்படுகின்றனர்

இருபத்தியோராம் நூற்றாண்டிற்குள் பிரவேசிப்பதற்கு இன்னும் நான்கு வருடங்கள் தான் இருக்கின்றன. புதிய நூற்றாண்டில் நமது திருச்சபையின் நிலையென்ன? ஆற்றவேண்டிய பணிகள் யாவை? நாம செல்ல வேண்டிய பாதை எது? என்பவற்றைக் குறித்து நாம் சிந்தித்து தீர்மானங்கள் எடுக்கவேண்டும்.

இம்முறை அமெரிக்காவிலிருந்தும் அவுஸ்திரேலியாவிலிருந்தும் சில பிரதிநிதிகள் எமது அத்தியட்சாதீன சங்கக் கூட்டத்தின் சில பகுதிகளில் கலந்து கொள்ள விருக்கின்றனர். நமது ஆதீனத்துக்கு அவசியமான இரண்டு நூல்களையும், 1993ம் ஆண்டுக்கான ஆதீனசங்க வருடாந்த நிருபத்தையும் இக்கூட்டத்தின் போது வெளியிடவிருக்கின்றோம்

1994ம் ஆண்டு பலவிதமான அனுபவங்களுக்கூடாக இறைவன் நம்மை வழிநடத்திவந்தார். நாம் அறியாத காலத்திற்கூடாக நாம செல்லும போது இறைவனின் ஞானமும் தெய்வ பலமும நமக்கு மிகவும் அவசியமாகின்றது

அன்புடன் † எஸ். ஜெபநேசன

# The Morning Star

Diocesan Office, Vaddukoddai 17 . 02 . 1995


## EDITORIAL

## GOD IN CREATION

Today's threat to the world is 'Secularism.' God is stripped of his connection with the world and the world is increasingly secularized day by day. As the world moves towards secularism, the exploitation of the world's resources also is on the increase. Eventually, the world will become devoid of all the resources - a state of barrenness. There is, th refore, an urgency to develope an 'Ethical Code' on the basis of the creative act of God

The creation is a Trinitarian process; the Father creates through the Son in the Holy Spirit. The whole creation is created 'by God', formed 'through God' and exists 'in God.. The creation as a whole should include 'Creatio originalis', 'Creatio continua' and 'Creatio nova'. Creatio originalis-the creation in the beginning - is the history of stares or generations through which the world came in to being at its creation 'Creatio continua' is the history through which the whole creation is sustained by God entering His creation and transforming it. Creatio nova- the creation of the new heavens and the new world- is the new creation when every thing is made perfect. God will then enter His Sabbath rest

The Christian doctrine of Creation as developed by the western theologians, unfortunately, came to be narrowed down to 'creatio originalis.' Creatio continua and creatio nova receded into the background and were forgotten. As a result, creation in the beginning was declared to be a finished and complete creation. This view also created a dispute between the creationists and the evolutionists.

The evolutionists, following 'the path of 'the survival of the fittest' replaced the assumption of a divine creation by the assumption of a natural origin. So the theory of evolution has become the perfect instrument for developing a materialistic out look. Man is at the top rung of the evolutionary ladder aud therefore, has the right to control and subdue every thing. The earth is nothing but a reservoir of resources and is at the disposal of man.

The creationists, on the other hand developed a parallel theory where man is the crown of the creation. This has led to the development of the modern anthropology which uncritically took the modern anthropo centric world picture as its premise. According to this conception, the human being is the centre of the world and world was created for his sake and for his use.

The Priestly writers give us an entirely different picture. According to the Priestly writings, the crown of creation is the Sabbath and not man. God blessed the man, but He blessed the animals also. It was the Sabbath, that He blessed and sanctified. God wants the whole creation to enter into His Sabbath rest which will be the culmination of Creatio nova. Meanwhile man should be involved in the creation work of God. Man is created in the image of God and is given the breath of God so that he can be God's agent on earth. But man -Adam- is also taken out of the dust- Adamah. Therefore he is part of the earth. Like all other creatures his dwelling place is on this planet; he shares his food with other animals. But man tried to elevate himself from the status of a created being to that of a creator. He forgot that he was only an agent of the Creator God and appointed by God to tend his garden - someone like a foreman a leader among fellow workers.

Man's attempt to elevate himself was the reason for the Fall.' God intervened and reminded that 'Adam' was 'adamah' and to 'adamah' shall he return. ( Gen 3 :19 ) This is what happened when they built the Tower of Babel. This has been happening in history through out. This will happen in the future as well. The creative Act of God should then underlie the basis for the Christian Ethics.

## Bishop Kulandran Day

Readers are reminded to observe the Sunday 19th February as Bishop Kulandran Sunday. Please remember to offer your contributions at the Sunday Service in your respective Churches.

We regret to inform that contributions by Erlalai South members were inadvertantly included under Erlalai North. The corrected list is given below.

## CORRECTION

| | |
|---|---|
| Erlalai North | 325-00 |
| Erlalai South | 2864-75 |
| Rev. & Mrs. S. C. Arnold | 100-00 |
| Mrs. D. A. Thurairatnam | 100-00 |
| Mrs. G. S. Navaratnam | 100-00 |
| Mrs. G. K Muttiah | 100-00 |
| Mrs. M. A. Selvanayagam | 100.00 |
| Mr & Mrs. A. Paramananthan | 100-00 |
| Mr. & Mrs R. J Navaratnam | 100-00 |
| Dr & Dr.(Mrs) Prabaharan | 100-00 |
| Mr Mrs. M. Jeevakanthi | 450-00 |
| | 4439-75 |

### REPRESENTATIVE

(Continued from page 4)

children. He clarified misconceptions in the South about the Regional Council here on a humerous note In their reply the President of the National Council of YMCA's and Secretary expressed their gratitude and appreciation.

For the most warm and cordial welcome given to them. He said that "we all are one in Christ whatever race, creed or caste we may be". They also appreciated the work done by- the much spoken of- Regional Council of Y.M.C.A's here. As a gesture of appreciation and a token of goodwill he presented a cheque to the President of the Regional Y.M.C.A's. for refugee and rehabilitation work. The President on receiving the gift thanked the National Council for its magnanimous gesture. The vote of thanks was delivered by Mr. M. Jeyarajasingam the Secretary of the Regional Council. The meeting came to a close with prayer and benediction pronounced by Rev. Anthony Paul, a Vice President of the Regional Council. The delegation joined in on Sunday at morning worship service at St-Peters Church Jaffna, where the Holy Eucharist was celebrated. Sunday being a rest day they left on Monday the 6 th.

## *In Loving Memory Of*



**Mrs. Alice Muthumany Ariyaratnam**

Born: 15-5-1916

Entered Glory: 04-2-1994

Many women do noble things;
But you surpass them all

Fondly remembered by
**her husband
and
Loved ones**

Registered as a News Paper at the G P. O. Sri Lana under No. Q / J / 140 94. News Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press. 182, Ist Cross Street, Jaffna on Friday the 17th of February 1995 and published by Mr. T. Tambiappa, Diocesan of fice, Vaddukoddai.